செ.வெ.எண்:- 227 நாள் 10.03.2010

செய்திக் குறிப்பு

தமிழ்நாடு சட்டப் பேரவை

2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு

(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 40/2008) மீதான ஆய்வுக் குழு

*சட்டமுன்வடிவு மீதான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன*

2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 40/2008) 14.5.2008 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிமுகம் செய்யப்பட்டது. 21.7.2009 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றதையடுத்து, இச்சட்டமுன்வடிவினை ஆய்வு செய்து அறிக்கை அளிக்க மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டது.

2. இச்சட்டமுன்வடிவின் மீது ஆர்வமுள்ள நிறுவனங்கள் / அமைப்புகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை எழுத்துபூர்வமாக பெற்றும் தேவையிருப்பின் குழுவின் முன் நேரில் அழைத்தும் கருத்துக்களை பெற்று இச்சட்டமுன்வடிவினை விரிவாக ஆய்வு செய்யலாம் என 8.3.2010 அன்று நடைபெற்ற ஆய்வுக் குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்குறிப்பிட்ட சட்டமுன்வடிவு தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் வெளியீடு, பகுதி–4 பிரிவு–1, நாள் 14.5.2008–ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதன் நகலினை தமிழ்நாடு சட்டப் பேரவை இணைய தளம் **www.assembly.tn.gov.in**–ல், New **The Tamil Nadu Police Bill, 2008** என்ற தலைப்பின் கீழ் பார்வையிடலாம்.

4. கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை அனுப்ப விரும்புவோர், அவற்றை முழு வெள்ளைத் தாளில் (தமிழ் அல்லது ஆங்கிலம்) தட்டச்சு செய்து இரண்டு நகல்களை **30.4.2010 ஆம் நாளுக்குள் செயலாளர், தமிழ்நாடு சட்டப்பேரவைச் செயலகம், சென்னை** என்ற முகவரிக்கோ அல்லது நிகரி மூலமோ நிகரி எண். **044 – 2567 8956** அல்லது மின் அஞ்சல் மூலமோ **assemblybills@tn.gov.in** அனுப்பி வைக்கலாம்.

5. ஆய்வுக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்படும் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் அடங்கிய குறிப்பாணைகள் குழு அறிக்கையின் ஓர் பகுதியாக இருப்பதால், குழு அவைக்கு அறிக்கை அளிக்கும் வரை இரகசியமாக வைத்துக்கொள்ளல் வேண்டும். வேறு எந்த முறையிலும் வெளியிடுவதோ அல்லது பிரசுரிப்பதோ கூடாது. மீறினால் அது அவை உரிமையை மீறிய செயலாகும்.

**மா. செல்வராஜ்,**
**செயலாளர்.**

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9